# வானம் எங்கள் வசம்

## (பிள்ளைப் பாடல்கள்)
## இசைப்பா அரங்கு - 01



யானைத்தாத்தா தேவன்பூதனார்

ஜீவநதி & கலாலயம் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைப்பா அரங்கு - 01 - பதிவுகள்

புத்தகப் பண்பாடும் அரங்கப் பண்பாடும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் இரு கண்கள் போன்றவை. மக்களின் இறைமையையும் சுயமரியாதையையும் மீட்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் சமூக மாற்றச் சிந்தனையும் செயலும் உருப்பெறும். இதற்கான இருவழிகளில் புத்தகமும் அரங்கும் பிரிக்கப்பட முடியாதன. பிள்ளைகளே எமது மகிழ்ச்சிக்கும் பண்பாட்டுக்குமான கருவூலங்கள். பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டுடன் புத்தக, அரங்கச் செயற்பாடுகளும் சமதளத்தில் முன்னெடுக்கப்படும் போதுதான் ஆளுமையுள்ள பிள்ளைகளை நாம் தரிசிக்க முடியும். இசைப்பா அரங்க நிகழ்வுகளை ஆற்றுகை செய்கையில் புத்தகமும் அரங்கும் இரண்டறச் சங்கமிக்கின்றன. இந்நூலில் எமது அரங்கப் பண்பாட்டுப் பேரவையின் இசைப்பா அரங்கு - 01 - இல் நிகழ்த்தப்படும் பாடல்கள்- 10 உள்ளடக்கப்பட்டுள்ளன. இப்பாடல் வரிகள் எழுதுவதில் ஈடுபட்ட யானைத்தாத்தா தேவன்பூதனார், இப்பாடலைகளைப் பாடிய இளையோர் பேரவையின் பாடகர் குழு உறுப்பினர்கள் கு.புஸ்பகஜன், அ.அபிக்ஷா, ச.லினிஸ்கா, அ.சாதனா, சு.கீர்த்திகன் இசையாக்கத்தில் பங்காற்றிய நண்பர் ம.ஆனந்த், பாடல்களை ஒலிப்பதிவு செய்த ப.கருணாகரன், ஒலிப்பதிவிலும் பாடல் கலவையிலும் தேர்ச்சியிலும் பங்காற்றிய யொனி அந்தோனி ஜஸ்டின், புகைப்படக்கலைஞர் அனுஜன் (கிளிக்கேர்ஸ்), இந்நூலுருவாக்கத்தில் உதவிய ஜீவநதி க.பரணீதரன் ஆகிய அனைவருடனும் எமது அன்பைப் பகிர்ந்து கொள்கிறோம்.

புத்தகப் பண்பாட்டுப் பேரவை
இல. 68, நீதிமன்ற வீதி,
மல்லாகம்

சோ.தேவராஜா
கலா லயம் பதிப்பகம்
2023.07.11

வெளியீடு : ஜீவநதி & கலாலயம் பதிப்பகம்
முதற்பதிப்பு 2023 ஆடி
விலை : 250.00
பக்கம் : 12
ISBN : 978-955-0958-06-1


ஜீவநதி வெளியீடு - 285 கலாலயம் பதிப்பகம்-05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

## சின்னச் சின்னப் பிள்ளைகள்



சின்னச் சின்னப் பிள்ளைகள் நாம்
சேர்ந்து விளையாடி மகிழ்வோம்
ஆடிப்பாடி கொண்டாடுவோம்
சிறுவர் உலகை ஆக்கிடுவோம்
- சின்னச் சின்ன

அன்பாய் பாசமாய் அளைவோம் நாம்
இன்பமாய் உறவாய் இணைவோம் நாம்
எல்லோரும் மகிழ நன்மை செய்வோம்
நல்லாய் வாழ்வோம் நட்பில் இணைவோம்
-சின்னச் சின்ன

இயற்கையை இரசிப்போம் இன்பத்தில் திளைப்போம்
பறவையாய்ப் பறப்போம் புலியாய் பாய்வோம்
மயிலாய் ஆடுவோம் குயிலாய் பாடுவோம்
மனிதரெல்லாம் மகிழ்வோம் இணைந்தே!
-சின்னச் சின்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2
## பச்சைக்கிளியே

பச்சைக் கிளியே பறந்து வா
பாடிப் பாடிப் பறந்து வா
ஆசை முத்தம் எனக்குத் தா
அன்பாய் பேசி மகிழ்வோம் வா
-பச்சைக் கிளியே

செல்லமாய் பேசி நடிப்போமே
சேர்ந்து ஆடி நாம் மகிழ்வோமே
நல்ல பழங்கள் நான் தருவேன்
நன்றாய் தின்று சுவைப்பாயே
-பச்சைக் கிளியே

நெல்லும் பயிரும் வளர்ந்திருக்கு
வயலை நோக்கி பறந்து வா
கல்லும் முள்ளும் பரந்திருக்கு
கவனமாய்ப் பார்த்து பறந்து வா
-பச்சைக் கிளியே-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3

## காட்டு ராஜா

காட்டு ராஜா சிங்கம் வந்தேன்
காலம் முழுதும் நானே அரசன்
மாட்டும் விலங்கு அனைத்தையும் கொல்வேன்
நாட்டிலென்றும் பெரியவன் நானே
-காட்டு ராஜா

வாட்டும் கவலைகள் தீர்ப்பேன் நான்
வாரும் யாவரும் அடிபணிந்தே
போடுங்கள் தாளம் என் பாட்டுக்கு
ஆடுங்கள் பணிந்து வாழும் வரை
-காட்டு ராஜா

அன்பு காட்டுவேன் அடி பணிந்தால்
நன்மைகள் செய்வேன் சொற்படி நடந்தால்
என் புகழ் போற்றி நடத்தைகள் மாற்றின்
என்றுமே உன்முன் ராஜன் நானே
-காட்டு ராஜா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4

## கொப்பியும்மில்லை...

கொப்பியுமில்லை பென்சிலுமில்லை கொண்டுபோக
bாக்கும் இல்லை சாப்பிட்டு வர வசதியுமில்லை
வகுப்புத் தோழர் என்னுடன் இல்லை
-கொப்பியுமில்லை


மழையும் வந்தால் வீடு ஒழுகுது
வெய்யிலை கண்டால் வேர்த்துக் கொட்டுது
அக்கம் பக்கம் அயலார் இல்லை
ஆரும் எமக்கு உதவியுமில்லை
-கொப்பியுமில்லை

காலையில் எழுவேன் புத்தகம் படிப்பேன்
பாட்டுக்கள் பாடி மகிழ்வாய் இருப்பேன்
அப்பா அம்மா சொற்படி நடப்பேன்
நல்ல பிள்ளையாய் நானும் நடப்பேன்
-கொப்பியுமில்லை-



இல்லை என்பதை இல்லை செய்குவோம்
தொல்லை யாவும் தொலைத்தே தீருவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 5

## நாயும் பூனையும் விளையாட

நாய் பூனையும் விளையாட
ஆடும் மாடும் கூத்தாட
எலியார் வந்து தாளம் போட
மயில்கள் கூடி நாட்டியம் பயில
-நாய்-

குயில்கள் கூவுது பார் அங்கே
காகம் கரையுது காண் இங்கே
அணில்கள் தாவுது மரங்களிலே
மரங்கொத்தி மரத்தில் பார் பார் பார்
-நாய்-

புறாக்கள் நெல்லைத் தின்னுது பார்
சிட்டுக்குருவி பறக்குது பார்
பறந்து பாடுது பார் பார் பார்
சிறந்து வாழ்வோம் ஒன்றாய் நாமே
-நாய்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

## கத்தரிச்செடி

கத்தரிச் செடி நான் கத்தரிக்காய் கொடுப்பேன்
தக்காளிச் செடி நான் தக்காளி கொடுப்பேன்
தென்னை மரம் நான் தேங்காய் கொடுப்பேன்
பனைமரம் நானே பனம்பழம் கொடுப்பேன்
-கத்தரி

முருங்கை நானே முருக்கங்காய் கொடுப்பேன்
மாமரம் நானே மாங்கனி கொடுப்பேன்
பலாமரம் நானே பலாப்பழம் கொடுப்பேன்
வாழை நானே வாழைப்பழம் கொடுப்பேன்
-முருங்கை

கொடுப்போம் கொடுப்போம் எல்லாம் கொடுப்போம்
தடுப்போம் தடுப்போம் வறுமையைத் தடுப்போம்
பொழிவோம் பொழிவோம் மழையாய் பொழிவோம்
உயிர்கள் பிழைக்க ஒக்சிசன் கொடுப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# நிலத்தைக் கொத்து

நிலத்தைக் கொத்து நீரைப் பாய்ச்சு
மண்வளம் பாத்து நிலைமையை மாத்து
வளத்தைச் சேர்த்து வாழ்வை உயர்த்து
மாற்றம் காண்போம் மாணவர் சேர்ந்து
-நிலத்தைக்



சாணத்தை அள்ளி மண்ணைக் குழைத்து
மண்புழுவைக் காண மண்ணை மாத்து
வானத்தை நோக்கி பயிரை வளர்த்து
மானத்தைக் காத்து மகிழும் கூத்து
-நிலத்தைக்

கூத்து கூத்து நிலத்தில் கூத்து
அளைந்து அளைந்து மண்ணை அளைந்து
காத்து காத்து பயிரைக் காத்து
மாத்து மாத்து உலகை மாத்து
-நிலத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8
## கால்பந்து அடிப்போம்

கால்பந்து அடிப்போம் விதிமுறை
மதிப்போம் மேலே பந்து பறக்கப் பறக்க
தலையால் பந்தை பறந்தே அடிப்போம்
பிடி பிடி பந்தைப் பிடி பிடி
- கால்பந்து

நடுவரின் தீர்ப்பை நாமே மதிப்போம்
அடிக்கச் சொன்னால் பந்தை அடிப்போம்
எடுக்கச் சொன்னால் எடுத்து எறிவோம்
அடி அடி பந்தை அடி அடி
- கால்பந்து

கோல்கள் போடுவோம் பேறுகள் பெறுவோம்
போட்டியில் வென்றே பெருமையடைவோம்
மழை பெய்தாலும் வெயில் அடித்தாலும்
களைக்காமல் ஆடி நாம் மகிழ்வோமே
- கால்பந்து-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



9

## இலங்கை எங்கள் திருநாடு

இலங்கை எங்கள் திருநாடு
நாம் வாழும் பூமி யாழ்ப்பாணம்
வலங்கள் வருவோம் வீதிகள் சுத்தி
வாருங்கள் செல்வோம் ஊர்கள் பார்க்க
-இலங்கை

சித்தன்கேணி சங்கானை சுழிபுரம் மாதகல்
வித்தைகள் காண விரைந்தே செல்வோம் கடற்கரை நோக்கி
பண்டத்தரிப்பு வட்டுக்கோட்டை மூளாய் பொன்னாலை
கண்டு களிப்போம்
-இலங்கை

அம்மன் திருவிழா மாதாப்பெரு விழா
வெசாக் பண்டிகை எல்லாம் எங்கள் விழாக்களே
-இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

# வானத்தில் பறப்போம்

வானத்தில் பறப்போம் நிலவினைப் பிடிப்போம்
விண்மீன் கைகோர்த்து நாம் விளையாடி மகிழ்வோம்
அம்மா அப்பா தம்பி தங்கை நண்பரோடு சேர்ந்து
நாம் ஒன்றாய் வானில் பறப்போம்
மேகம் எங்கள் கைவசம்

-வானத்தில்-



செவ்வாய் கிரகம் சேர்வோம்
சந்திரன் மீது கால் பதிப்போம்
புதனும் வியாழனும் கிரகங்கள் ஒன்றாய்
வெள்ளியும் சனியும் வீதி உலாவர

-வானத்தில்-

9789550958061
250.00
9789550958061

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org